செ.வெ.எண்:36 நாள்:19.08.2021

# அரியலூர் மாவட்டத்தில் மத நல்லிணக்க நாள் உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் எடுக்கப்பட்டது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மத நல்லிணக்க நாள் உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (19.08.2021) எடுக்கப்பட்டது.

மத நல்லிணக்க தினம் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்த தினமான ஆகஸ்ட் 20-ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் உயரிய கொள்கையான அனைத்து மதங்களுக்கும் சம உரிமை என்ற தன்மையை பல்வேறு இன, வகுப்பு, கலாச்சார மற்றும் மதங்களின் சங்கமமான இந்திய திருநாட்டில் நிலை நாட்டுவதைக் குறிக்கும் வகையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

மத நல்லிணக்க நாள் உறுதிமொழி நான் சாதி, இன, வட்டார, மத அல்லது மொழி பாகுபாடு எதுவுமின்றி, இந்தியாவின் அனைத்து மக்களின் உணர்வுபூர்வ ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் பாடுபடுவேன் என்று உளமார உறுதிமொழி எடுத்து கொள்கிறோன். மேலும், எங்களிடையேயான அனைத்து வேறுபாடுகளையும், வன்முறையில் பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் அரசியலைமைப்புச் சட்ட வழிமுறைகளைப் பின்பற்றியும் தீர்த்துக்கொள்வேன் என்றும் இதனால் உறுதி அளிக்கிறேன்" என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாசிக்க அதனை தொடாந்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களும் பின் தொடாந்து கூறி மத நல்லிணக்க நாள் உறுதிமொழியினை எடுத்துக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.சு.சுந்தர்ராஜன் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**